உளி- 1 | ஓசை-62 | மே-2022 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி
மதன் குமார்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
திண்டுக்கல் தமிழ்பித்தன்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

**படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை**
**இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.**

சுரேஷ்பாபு ராசேந்திரன் - 4
க. அய்யப்பன் - 5
நேசன் மகதி - 6
சுப. முத்துக்குமார் - 6
ஆனந்த குமார் - 7
மா.காளிதாஸ் - 8
பிரியா பாஸ்கரன் - 9
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் - 10
சுசித்ரா மாரன் - 10
மழைக்குருவி - 11
கோ.ஸ்ரீதரன் - 11
வீரமணி - 12
கோ.லீலா - 13
ரா.ராஜசேகர் - 14
அ.சீனிவாசன் - 15
பிரபுசங்கர் க - 16
க.ராஜகுமாரன் - 17
சரண்யாசத்தியநாராயணன் - 18
மகேஷ் சிபி - 19
கதிரவன் வீ - 19
அமுதா தமிழ் நாடன் - 19
ரிஸ்கா முக்தார் - 20
மகிழினி காயத்ரி - 21
முகமது பாட்சா - 22
கோ. பாரதிமோகன் - 23
உமா மகேஸ்வரி பால்ராஜ் - 24
அகதா - 25
சத்யா மருதாணி - 26
காயத்ரி ராஜசேகர் - 26
செந்தாரப்பட்டி இரா. செல்வக்குமார் - 27
குடந்தை அனிதா - 27
செ.புனிதஜோதி - 27
கா.ரஹ்மத்துல்லாஹ் - 28
அ. உமர் பாருக் - 29
கருவேல் பாண்டியன் - 30
ஷெண்பா - 30
சௌவி - 31
ரகுநாத் .வ - 32
மு.முகமது ஃபாருக் - 32
தமிழ்மணவாளன் - 33
ப.ராஜகுமார் சிவன் - 34
சாண்டில்யன் விவேகானந்தன் - 35
ஜெயாபுதீன் - 35
வீரசோழன்.க.சோ. திருமாவளவன் - 35
குபோதினி - 36
ஜே.ஜே.அனிட்டா - 37
தி.கலையரசி - 38
கருவை ந.ஸ்டாலின் - 39

# அழுக்கர்கள்



சாலையில் வழிந்தோடும்
சாக்கடையில்
பாதணிகளும் பட்டுவிடாமல்
பார்த்து பார்த்து
கடக்கிறார்கள்
நன்கு மூச்சை இழுத்து
நாசிதுவாரங்களை
விரல்களால் அடைத்து
மூச்சு பயிற்சியும்
பயில்கிறார்கள்
அதில் கோவணம் கட்டி
மூழ்கி எழுந்தவன் தன்
மேலிருந்த சாக்கடையை
நன்னீரை ஊற்றி
கழுவிக் கொண்டு இருந்தான்
முகம் சுளித்து
கடந்துபோனவர்களின்
உள்ளிருக்கும்
சாக்கடையை தான்
என்ன செய்வதென்று
தெரியவில்லை.

சுரேஷ்பாபு ராசேந்திரன்



பழைய புத்தக
அடுக்குகளிலிருந்து
யதார்த்தமாக மிளிர்கிறது
நீ பரிசளித்த
டைரியொன்று
கையிலெடுத்து புரட்டி பார்க்கையில்
இதழ்வரிகள் பதித்து
நீயெழுதிய
முத்தக்குறிப்பொன்றை
அனிச்சையாக விரல்கள் நீவுகின்றன
பிம்பம் வழியாக உன்னை வழியவிட்டு
இருளடர்ந்த வானில்
அள்ளமுடியாத நட்சத்திரங்கள் போல
கொட்டிக்கிடக்கின்றன
என் மன அறையில்
உன்னோடு சேர நினைத்து
கலைந்து போன கனவுகள்.

**க. அய்யப்பன்**



ஒரு வாய் சோறு
உனக்கு ஊட்டிவிட
இடுப்பிலே தூக்கி வைத்துக்கொண்டு
நிலவைக்காட்டி
பக்கத்துவீட்டு மீசைக்கார
தாத்தாவை பயமுறுத்தச்சொல்லி
வேப்ப மரத்துல இல்லாத
பேயை அழைச்சு
பாட்டும் கதையும்
கலந்துசொன்ன அந்த
நாட்களை நினைத்துப்பார்க்கிறேன்
மகனே....
முதியோர் இல்லத்தில்
உணவு வாங்க நான் வரிசையில்
நிற்கும் நேரங்களில்...!

**நேசன் மகதி**

யோனிக்கு
ஓய்வு கிட்டும் நாளில்
உறங்கும் தாசியின்
இறகுத் தலையணை
என் நேசம்

**சுப. முத்துக்குமார்**



வியர்வைகளின் அடர்த்தியில் வெப்பத்தை
கடக்கையில்
காணாமல் போன
காற்றை தேட தொடங்கினோம்..

கடைசியாய் வேப்ப மரத்தை
வெட்டுவதற்கு முன் இலைகளை அசைத்த போது
சந்தித்த ஞாபகம்..

இடைவெளிகளற்ற வீடுகளுக்கு
மத்தியிலும் ஒளிந்து கொள்ள
இடமில்லை..

வாகன போக்குவரத்தின் புகைக்குள்ளும்
நெகிழிகளின் நடமாட்டத்திலும்
ஒரு வேளை
மூச்சுத்திணறி இறந்திருக்கலாம்..

என்பதால் எங்களுக்கு
மின்விசிறியே போதுமானதென
சமாதானம் செய்து கொண்டு
சுவாசிக்கிறோம்..

**ஆனந்த குமார்**



மண்ணின் தரம்
சரியான வேக்காட்டுப் பதம்
தட்டிப் பார்த்து வாங்கும் போது
தெரிந்துவிடுகிறது.

தோளில் நிரம்பிய நீரோடு
சுடுகாட்டில் சுற்றி வந்தபோது
அரிவாள் நுனியால் மூன்று ஓட்டை.

ஆயிரம் இருந்தாலும் கோடைக்கு
அந்தக் குளுமை போல் வராது.

மஞ்சள்கிழங்கை மாலை போல் கட்டி
குலவையிட்டு
வாசல் பொங்கலிடுவாள் அம்மா.

திருவிழாவில் பூக்கார கணேசன்
கடம் வாசிக்கும் அழகே தனி.

அவசரத்திற்கு அன்றொரு நாள்
புளிப்பானையிலிருந்து
ஆயிரம் ரூபாய் எடுத்து நீட்டினாள் அப்பத்தா.

சக்கரத்திலிருந்து லாவகமாக எடுத்து
காய வைத்து எடுப்பதற்குள்
வலுத்துவிட்டது பேய் மழை.


தோண்டத் தோண்ட
மட்காத எலும்புகளை மீட்டுத் தரும்
மண் கரைந்து விடாதபடி
பனையோலைகளால் மூடுகிறான்.

பதினியும் மோரும்
குவளை இருபது ரூபாய்க்கு
வாங்கிச் செல்பவன்
இடுப்பில் மண்பானை சுமப்பவள் தோன்றும்
காட்சியை நொடியில் மாற்றுகிறான்.

கரும்புள்ளி செம்புள்ளி குத்தி
இன்றும் கவிழ்ந்து கிடக்கிறது
உறியாகத் தொங்கும் வாய்ப்பிழந்த
ஒரு திருஷ்டிப் பானை.

**மா.காளிதாஸ்**

# அகப்பையில் நிறையும் அன்பு



பூசனிக்காய் வத்தல்கள்
கோலங்களாய் வரையப்படுகின்றன
மொட்டை மாடியடைத்து

வடு மாங்காய்களுக்கு திடீரென
கிராக்கி ஏறிவிட்டது
ஊர்ச் சந்தையில்

தோட்டத்துத் தென்னையில்
நிறைய இளநீர் காய்க்க வேண்டுமென
நேர்ந்து கொள்ளப்பட்டு
உடைபடுகின்றன
தேங்காய்கள்

பேச்சு வாக்கில் கோடை விடுமுறைக்கு
ஊருக்கு வருகிறேன்
எனச் சொல்ல

அம்மா பெரியம்மாக்களின்
அன்புகள் அத்தனையும்
உருமாறுகின்றன
அகப்பையை நிறைக்கும்
அமிர்தங்களாய்.

**பிரியா பாஸ்கரன்**



காசியில் மரணம்
நல்ல சாவென்றார்
வைகுண்ட ஏகாதசியில் மரணம்
நல்ல சாவென்றார்
உறக்கத்திலேயே மரணம்
நல்ல சாவென்றார்
அனுபவ முதுமையில் மரணம்
நல்ல சாவென்றார்
மருத்துவச் செலவில்லா மரணம்
நல்ல சாவென்றார்
இப்போதெல்லாம்
விடுப்பு நாளில் மரணமே
நல்ல சாவென்கிறார்...
முணுமுணுப்பில்லா
இறுதி ஊர்வலத்திற்கு
சுவாசத்தை
இழுத்துப் பிடித்தாக வேண்டும்
வாரக்கடைசி வரை...

**வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**

மழைத்துளி வரைய நிறம் தேர்கிறேன்

எதேச்சையாய் தட்டிவிட்டுச் செல்கிறாய் வானவில்
கூடையை

சரக்கொன்றையாய் உதிரும் துளிகள்
பெருந்திணை...

பெருக்கியள்ளி கூடையில் சேர்த்து
முன்னம் நாம் செய்வித்த முப்பட்டகத்தில்
உன்பக்கம் கொட்டுகிறேன்

ஒருங்கிய ஒற்றை ஒளிக்கற்றையில் கிடைத்தது
மழைத்துளி வரைய கைக்கிளை வண்ணம்

**சுசித்ரா மாரன்**



உங்கள் கவிதைகளை
முதலில் கொஞ்சமும்
கடைசியில் கொஞ்சமும் வாசித்தாலே
கவிதை புரிந்துவிடுகிறது

இடையில் எதற்கு இவ்வளவு சொற்கள்
என்கிறார்கள்

நமதிந்த வாழ்வே இப்படிப்பட்டதுதான்
இருந்தாலும்
இடையிலும் கொஞ்சம் வாழ்ந்துதான்
தொலைக்க வேண்டியிருக்கிறது
இல்லையா என்றேன்.

**மழைக்குருவி**

முதல் நாள் ரிசப்ஷனிலிருந்து
கடைசி நாள்
கட்டு சாத கூடை வரை
நானெடுத்து தொகுத்த
ஆல்பம்
அவ்வளவு அருமையென்கிறார்
உன் அப்பா
நான் தான் போட்டோகிராபரென
உனக்கு முன்னமே தெரியாது
நீ என்னென்ன கோணத்தில்
என்னென்ன அழகிலிருப்பாயென
உன்னிடம் தொங்க தொங்க
தாலி வாங்கியவளுக்கு கூட
இனி தெரியாது.....

**கோ.ஶ்ரீதரன்**



படிமங்களும்
குறியீடுகளும்
உத்திகளும்
அறிந்திராத
நாட்களில்
என்னிடம்
ஒரு கவிதை இருந்தது

நிலவும்
நட்சத்திரங்களும்
வானமும்
வசப்படுவதற்கு முன்
குளிர்ந்த இரவும்
சில கனவுகளும்
இருந்தன

ஓயாமல் சுழல்கிற
சக்கரங்கள்
வாய்க்கப்பெறுவதற்கு முன்
பாதங்களால்
உரையாடிக்கொண்டு
பயணித்த
அழகிய பாதைகள்
இருந்தன

வீடென ஒன்றை
மதிலெழுப்பி
சிறை வைத்துக்
கொள்வதற்கு முன்
உதைத்து விளையாட
ஒரு பூமிப்பந்திருந்தது

அமரவும்
உண்ணவும்
உறங்கவும்
கொல்லப்பட்ட மரங்கள்
வந்து சேர்வதற்கு முன்
சிறு தோட்டமும்
நிறைய பறவைகளும்
அவற்றின்
பாடல்களும் இருந்தன

ஏதுமற்ற உச்சிக்கே
ஏங்கித்தவிக்கிறது
மீச்சிறு இதயம்

இட்டு நிரப்ப
தேவையெல்லாம்
இலவசமாய் கிடைக்கிற
துளி அன்பும்
சிறு நேசமும்
கொஞ்சம் காதலும்

**வீரமணி**



எங்கிருந்தோ அறை
வந்தமர்ந்த குருவி...

இறைந்து கிடந்த
புத்தகத்தை கொத்தி நிமிர
பச்சைய நறுமணத்துடன்
வனமொன்று எழுந்தது.

சட்டென்று மேலெழுந்து
கான்கிரீட் கூரையை
முட்டித் திரும்ப
நீலவானம் விரிந்தது

கிண்ணத்து நீரில்
மூக்கை சிலுப்ப
பேரருவியொன்று
ஆர்ப்பரித்தது.

திரைச்சீலையை பற்றி
ஊஞ்சலாட
காற்றின் வெளி பெருகியது.

விதையொன்றை கழித்து
பறந்தப் போது மழை
பெய்யத் தொடங்கியது

மழையேந்த நீட்டிய
கை தொட்டு விழுந்த
புத்தகம்தான் யாவும்
கனவென்றது...

எத்தனை பறவைகளின்
காடோ இப்புத்தகம்
திகைத்து நிமிர
சொற்கள் யாவும்
நெற்மணிகளாய்
சிதறிக்கிடந்தன...

சிட்டு! என்றழைத்தபடி
காத்திருக்கிறேன் ஒரு
பறவைக்காக...

**கோ.லீலா**



அமர்ந்திருந்தன
எப்போதோ ஒரே மதிலில்
இரு பூனைகள்
இடம் வலமென

பார்வை தவிர
குரல்கள் உரசிக்கொள்ளவே இல்லை
இரண்டுக்கும்

அதன்பிறகும்
அடிக்கடி எதிரெதிர் சந்திப்பில்
மியாவ் விசாரிப்புப் புன்னகைகள் மட்டுமே

இடப் பூனை இப்போது காணவில்லை


இன்னும் கட்டப்படாதவை
வலப் பூனை தேடாத மதில்கள்

இடப் பூனையின்
இடம் தெரியா பெயர்ச்சியால்
யானையளவு சோகம்
வலப் பூனையின் உலகில்

கற்றுக்கொண்டன
பூனைகளும்
சொல்லாமல் போக

**ரா.ராஜசேகர்**

# கண்மூடி(த்தன) தியானம்!!



பதினைந்து நிமிட தியானத்திற்கு பின்பு கதவைத்
திறந்ததில் காற்று வந்தது.
எட்டிப் பார்த்ததில் புதிதாய் மலர்ந்திருந்த மலர் கண்
சிமிட்டியது.
பதினைந்து நிமிடம் முன்பே கதவைத்
திறந்திருந்தால் காற்றோட்டமாக தியானம்
செய்திருக்கலாம்.
புத்தம்புது மலர் தானாக எட்டிப் பார்த்து கண்
சிமிட்டியிருக்கும்.
மலரையும் தியானத்தில் சேர்த்துக்
கொண்டிருக்கலாம்.
தியானம் இனிமையாய் மலர்ந்திருக்கும்!
என்றைக்குத் தான் கண்களைத் திறந்து கொண்டு
தியானிக்கப் போகிறோம்!!

**அ.சீனிவாசன்**

# தேவதையும் தேளும்



◆
தேளுக்கு வாலிலும்
தேவதைக்கு நாவிலும்
அமைந்திருக்கின்றன
விஷக்கொடுக்குகள்.....

◆
தலைப்பகுதியில் இரண்டு
நெஞ்சுப்பகுதியில் பத்தென
பன்னிரெண்டு கண்களாம் தேளுக்கு
எப்போதும் என்னை கண்காணிக்கும்
தேவதைக்கு உடம்பெல்லாம் கண்கள்.....

◆
தான் ஈனும் குட்டிகளை
முதுகில் சுமந்து செல்லும் தேளைப்போல
எப்போதோ நான் சொன்ன
பொய்களை நெஞ்சில்
சுமந்து கொண்டிருப்பாள் தேவதை.....

◆
ஒரு வருடம் முழுக்க
உணவில்லாமல் வாழுமாம் தேள்
ஒரு நிமிடம் கூட
என்னை சபிக்காமல்
கடக்க மாட்டாள் தேவதை.....

◆
இனப்பெருக்கம் முடிந்ததும்
ஆண் தேளை பிரிந்து விடுமாம் பெண் தேள்
நரைக்கூடி சுருக்கங்கள் விழுந்து போதும்
பிரியாமலிருப்பாள் தேவதை....

◆
இரவில் மட்டுமே
இரை தேடுமாம் தேள்
எந்நேரமும் என்னை
தேடிக்கொண்டேயிருப்பாள் தேவதை....

◆
முட்டைகளை உடலுக்குள்ளே
வைத்து அடைகாக்கும் தேளைப்போல
என் மீதான காதலை வெளிப்படுத்தாமல்
உள்ளுக்குள்ளே அடைகாக்கிறாள் தேவதை....

◆
புற ஊதா ஒளியின் கீழ் ஒளிரும் தன்மை
பெற்றிருக்கின்றனதாம் தேள்
எப்போதும் ஒளிரும் தன்மை
வாய்க்கப்பட்டிருக்கிறாள் தேவதை.....

◆
இத்தனை அறிவியலும்
ஆராய்ச்சியும் தேவையா??
என கேட்பவர்களுக்கு
என் தேவதையின் ராசி விருச்சிகம்.....

**பிரபுசங்கர் க**



ஏவிவிடப்பட்டு
சூறைக்காற்றை துணை கொண்ட தீ
அன்றொரு நாள் பூ வனமொன்றில் புகுந்தது..!

தொன்மையான மரமொன்றின் மீதேறி உச்சிப்பூவை
எரித்தது.. !

சிறுகிளையொன்றில் துளிர்த்த பிஞ்சின் இதழ்களை
ஒவ்வொன்றாக எரிய சாம்பலாக்கியது...!

தேன்சிட்டு கூட்டின் உள்புகுந்து
நடனமாடியது...!

பெரு வனமதை அழித்த மகிழ்வில்
காற்றுக்குள் மறைந்த தீ
தன்னை உணர்வதற்குள்
“நான்” என்ற கைகளுக்குள்
சிறைபட்டது...!

நீண்ட இடைவெளி கடந்தபின்
நேற்றுதான் பார்த்தேன்...

சுயத்தின் கண்கள் விழிக்க
அரியாசன புழுக்கத்தில் இருந்து வெளிப்பட்ட தீ..!

சமைக்கத் தொடங்கியது தன் நேர்மையை...!

**க.ராஜகுமாரன்**



ரயிலில் அன்று இரவு
ஒரு சைடு ஃபர்த்
குழந்தையுடன் வந்த இரு நபர்களுக்காக
ஒதுக்கப்பட்டிருக்கின்றது..
குழந்தையை பக்கத்தில் போட்டுக்கொண்டு
அவள் தூங்க,அவள் பாதங்களை தன் மடியில்
ஏந்தி அவன் அமர்ந்தபடியே ஜன்னலில்
தலைசாய்ந்து உறங்கிக்கொண்டிருந்தான்.
ரயிலின் அசைவுகளையும் தாண்டி குழந்தையின்
அசைவு அவளுக்கு
தெரிகின்றது..
தட்டி கொடுக்கின்றாள்..
அப்பொழுதெல்லாம் அவள் பாத அசைவில் அவன்
விழித்து
அவளையும் குழந்தையையும் தன் பாத்திர
பார்வைக்குள்
புதைத்து மீண்டும் விழி மூடுகின்றான்.
நள்ளிரவில் ஆழ்ந்து உறங்கிய ரயிலில்
பட்டென்று ஒருமுறை அழுகின்றது குழந்தை. அவள்
எழுந்து தூக்குகின்றாள்..என்ன என்னவென்று
பதறி எழுந்தவன் குழந்தையை வாங்கி சரி..
சரியென்று தோளிலிட்டு  சமாதானம் செய்கின்றான்.
முடியவில்லை.
வீரிட்டு அழுகின்றது குழந்தை.
ஜன்னல் பக்கமாய் திரும்பி அமர்ந்து
சேலை தலைப்பை சரிசெய்ய துவங்கும் அவளுக்கே
தெரிகின்றது
இருளிலும் குழந்தையின் வெற்று வயிறு.
குழந்தையை வாங்கி மடியிலிட்டு
வயிற்றை நிரப்புகின்றாள். மீண்டும் உறங்கி
போன குழந்தையின் முதுகை மெல்ல
தட்டிக்கொடுக்கின்றாள். அலுப்பில் அமர்ந்தபடியே
ஜன்னலுக்கு அருகில் சாய்ந்து அமர்ந்திருந்த
அவனின் மார்பில் தன்னை மறந்து தன் முதுகை
சாய்த்து கண் அசருகின்றாள்.
ஆசுவாசமான அவனின் கண்களும்
அவளை அரவணைத்தபடியே மெல்ல உறங்க
துவங்குகின்றது. இரவை அழகாக்கிய குதூகலத்தில்
சத்தமிடுகின்றது ரயில். தொடருகின்றது பயணம்.

**சரண்யாசத்தியநாராயணன்**



பனிக்குடத்தில் இருந்து நானும்
மழைத்துளிக்குள் இருந்து நதியும்
ஓடத்துவங்கினோம்
இறுதியில் இணைந்தோம்
நான் சாம்பலாகவும்
அது சமுத்திரமாகவும்

**கதிரவன் வீ**

பறவைகள் விதை போடுகின்றன
பூமி பிடித்துக் கொள்கிறது
வானம் தண்ணீர் ஊற்றுகிறது
சூரியன் ஒளி வீசுகிறது
விதையின் வாயோடு வாய் வைத்து
பிரபஞ்சம் சுவாசக் காற்றை ஊதுகிறது
உயிர் பெறுகிறது மரம்
நீ கோடரிகளை மட்டும் எறிந்துவிடு
மழை பெறுவதற்கு

**மகேஷ் சிபி**

மண்ணுக்கடியில்
புதைந்து கிடக்கும்
வேர்களின் ஈரத்தில்
இருக்கிறது
இலையுதிர்த்த கிளைகளின்
மறு துளிர்ப்பிற்கான
நம்பிக்கை....

**அமுதா தமிழ் நாடன்**



அவளுக்குப் பிடித்தப் பாடல்களை உனைக்கேட்கச் செய்கிறேன்
அவளுக்குப் பிடித்த நிறத்தில் உனை உடையணியச் சொல்கிறேன்
அவளுக்குப் பிடித்த இடங்களுக்கு உனை அழைத்துச் செல்கிறேன்
அவளுக்குப் பிடித்த உணவுகளை உனக்குப் பரிமாறுகிறேன்
அவளுக்குப் பிடித்தப் புத்தகங்களை உனக்குப் பரிசளிக்கிறேன்
அவளுக்குப் பிடித்த வாசனைத்திரவியங்களை உனக்கு வாங்கித்தருகிறேன்

மன்னித்துவிடு
அவளாக உன்னை மாற்றும்
முயற்சியில்
நீயாரென்பதையே
நான்
மறந்துதான் போய்விட்டேன்

பின்னும்
அத்தனைக்குப்பின்பும்
அவள் போல் ஆவதில்லை
வேறாரும்
என்பதை
இந்தக்காலம்
என் முகத்திலறைந்து சொல்லிச்செல்கையில்
ஆற்றாமையால்
எனக்கு
அழுகையே வந்துவிடுகிறது

**ரிஸ்கா முக்தார்**



நான்
மரணவீட்டிலும்
சிரிப்பைக் கை விடாத
ஒருத்தியை
சந்தித்தேன்

அவள்
சிரிப்பதைத் தவிர
வேறெதுவும் தேவை இல்லாதவளாக
இருந்தாள்

அவள் தோளை
மெதுவாகத்தான் தொட்டேன்
உடைந்து
அழத்தொடங்கினாள்
அப்போது

அவ்வளவு சுமைகள்
அவ்வளவு சோகங்கள்
அத்தனைக்கும்
நடுவில்தான்
அவள்
சிரிப்பை எப்போதும் கைவிடாதவளாயிருந்தாள்

இப்பொழுது
அவளின் கை விடப்படாத
இதழ்களின்
வழியோடும்
பெரும் சிரிப்பொன்று
மீண்டும் ஏந்திக்கொண்டது
அவளை

என்னையும்தான்...

பெட்டியினுள்ளே
இருப்பவரும்
இப்பொழுது
சிரித்துக்
கொண்டிருக்கிறார்

உண்மையில்
சிரித்துக்கொண்டே
இருப்பதைத் தவிர
வேறென்ன பெரிதாய்
இவ்வாழ்வில் இருந்துவிடப்போகிறது

**மகிழினி காயத்ரி**



உன்னை விட
உயரம் குறைந்தவர்கள் என நினைக்கிறாய்!
முதலில் உன் குதியுயர்க் காலணிகளைக் கழற்றி
வை!
பிறகு சமம் சரியாக உட்கார்ந்து பேசலாம்.
நீ பாடும் பாட்டு
உன் குடும்பத்தை மட்டும்தான் ஆராதித்து
வாழ்கிறது!
வாசனைத் திரவியத்தின் நாற்றம்
வியர்வைத் துளிகளின் வாசனையை விடவும்
அடர்த்திக் குறைவானது!
உன் நுனி நாக்குப் பேச்சில் எப்போதும் ஒப்பனை
முகம்!
நீ நடிக்கிறாய்?
மதத்தை உருக்கி மகுடம் என்று சூடிக் கொண்டாய்...
அது மூளையை உரிஞ்சிக் குடிக்கும்
ஆணவம் என்று அறிவாயா?
நீயும் நானும் சரியா
என்பதும்
உன் வஞ்சம் வளைத்து வைத்த கேள்விக் குறி..
அதை நிமிர்த்தி வைக்க
எமக்கொன்றும் ஆயுதங்கள் தேவையில்லை
கொஞ்சம் எச்சிலே போதும்...
வா நம் உயரங்களை இனி அளந்து பார்க்கலாம்!
.

**முகமது பாட்சா**

# கஸல்



பிழையொன்றும் இல்லைதான்
முத்தமிட்டு உன் கூர்வன்மத்தை வளர்த்திருப்பது

பிரயோகிக்கத் தெரியாதோரின் கைவாள் நீ
இந்தக் காயம்
கரத்திற்கான நன்றியா

காற்றுக்கு தெரியாதிருக்கலாம் கண்
காற்றின் உறவு என்பதுதான்
காதலின் பிழை

எறிந்த கல் கனியோடு திரும்பும் நியாயத்திற்கு
கண்ணெறிந்து பார்க்கிறாய் நீ

ரணமொன்றும் அப்படியில்லைதான் இதயத்திற்கு
நிராகரிக்கப்பட்ட வாழ்வைவிட

ஒன்றேவொன்றுதான் வலி மிகுந்த எனது கேள்வி
காதல் வேறு வாழ்வு வேறா?

கோ. பாரதிமோகன்



எந்தத் திட்டமிடலும் இல்லை
ஏதொரு எண்ணத்தையும்
இந்தக் காலையின் துவக்கம்
உள்ளே சொல்லவில்லை

அவசரகதியில் ஆரவாரமாய்
ஏதாவது இழுத்துப் போட்டுப்
பரபரவென நகர்ந்த பொழுதுகள்
சற்றே பின்னேறிப் போய் கிடக்கின்றன

தூசுதட்டித் துடைத்து சீராக்கி
மறுபுலனாய்வு செய்து பத்திரமாய்
உள்ளே தான் வைக்க வேண்டும்.
சரி எனக்கு ஒரு கோப்பைத்
தேனீர் வேண்டும் நான் களைப்பாய்
உணர்கிறேன் என்கிறேன்

எதிரொலியாய் என் யன்னல்
காற்று முத்தமிட்டுப் போகிறது
கண்மூடி ஆழ இழுத்து உள்வாங்கும்
அத்தூயக் காற்றின் ஆசுவாசம்
அவசியத் தேவையாய்

பால் மெல்ல காய்கிறது
சிலத்துகள்களை வடிகட்டி
நிரப்பப்படாத அக்கோப்பையை
நான் நிரப்பிக் கொள்ள வேண்டும்.
ஒற்றை எறும்பொன்று ஊர்கிறது
சர்க்கரைப் பாத்திரத்தில், அது நகரும்
வரைக் காத்திருப்பேன்.

அது எனக்கான தேனீர் எனவே....

**உமா மஹேஸ்வரி பால்ராஜ்**



அத்தனை எளிதில்லை இந்த வாழ்க்கை
எனது பால்யத்தின்
எல்லா விளையாட்டுகளிலும்
உப்புக்குச் சப்பாணிதான் நான்
வரிசையில் நின்றால் கூட
எனக்கு முன்னால் இருப்பவர் வரை தீர்ந்துபோகும்
கணிதப்பாடத்தில் தொண்ணூறு எடுத்தாலும் நான்
தோற்றவளாவேன்
பேச்சுப்போட்டியில் பரிசு கிடைக்காது
பாடினால் கைதட்டல் கிடைக்காது
ஆடினாலும் பின் வரிசையில்தான்
அழகாயில்லை
கலராக இல்லை
ஒல்லியாயில்லை
ஓட்டப்பந்தயத்தில் சிறுத்தையிடம்
மான் எப்போதும் தோற்றே போகும்
வாயில் அகப்பட்டுத் தப்பித்த மானுக்கோ
முதலிலிருந்து கற்றுக்கொடுக்கும்
இந்த வாழ்வு ஒரு தப்பில்லா பாடத்தை

**அகதா**



அத்தனை பேர்கள் வந்து போய்கொண்டு இருந்த
பேருந்து நிலையத்தில் உன் முகம் மட்டுமே
எந்தன் வருகையை எதிர்பார்த்து காத்துக்
கொண்டிருந்தது மயக்கா..

ஏக்கத்துடன்
பள்ளி முடிந்து வீடு திரும்ப அம்மாவை
காத்திருக்கும் குழந்தையின் சாயலாக..

**சத்யா மருதாணி**

செல்லும் வழி திரும்பத் தெரியா காட்டாறு
இவ்வாழ்வு
தண்மதி விழுங்கி
மசங்கிய நடை பயின்று
கூழைக் கற்களின் அணைப்பில் முயங்கி முனகி
ஓங்கரித்து வீழ்ந்து
ஆற்றுப்பட்டு
கழிமுகத்தில் கண்ணீர் உகுத்து
கடலில் மரிக்கும்
சவலை நதி இக்கொடுவாழ்வு.

**காயத்ரி ராஜசேகர்**



மீண்டும் மீண்டும்.
உள்ளங்கை இரண்டையும்
தேய்த்து கன்னத்தில்
வைத்துப் பார்க்கிறேன்.
ம்ஹூம்
அப்பாவின் கை சூடு
கிடைக்கவேயில்லை.

இணையனின்
மார்பில் புதைந்து
அப்பாவை தேடுகிறேன்
லப் டப் லப் டப்!!
ம்ஹூம் இது
என் குழந்தையின் தந்தை.

இப்போதெல்லாம்.
தொலைத்த இடத்தில் தான்
தேடுகிறேன்.
சாளரத்தில் வழியும்
நட்சத்திரத்தின் குளிர்ச்சி
அப்பாவாய் வெம்மையை
தர தொடங்கியுள்ளது..

**குடந்தை அனிதா**

பாட்டிலில்
அடைத்து
வைக்கப்பட்டிருந்த
நீரில்
இறந்து கிடந்தது
ஒரு
மீனின் கனவு...

**செந்தாரப்பட்டி இரா. செல்வக்குமார்**

தலைக்குமேல்
பூமி உருண்டையைத்
தூக்கிப் பிடித்த
பின்புதான்
கரைகிறது
நீர்க்குமிழி.

**செ.புனிதஜோதி**



அவன்
கருப்பாகத்தான் இருந்தான்.
முகத்தில்
கலையான வடிவுமைப்பு
ரசிக்கும்படி இல்லை

அறிமுகமே இல்லாத போதும்
அவனது குணநலன்கள்
எதுவுமெனக்குத் தெரியாத போதும்
பொதுப்புத்தியில்
வடியும் அருவருப்பை துடைக்கவில்லை நான்.

நூற்றுயிரண்டு டிகிரி காய்ச்சலில்
இடமில்லா அந்தப் பேருந்து நிறுத்தத்தில்
அவனருகில் மட்டுமே
ஒருஆள் அமர இடமிருக்கும்போது
அந்த நாளெனக்கு
பிரத்யேகமாய் சூனியம் செய்வதாய் தோன்றியது.

முட்கள் பூப்பதில்லை.
சில பூக்களைத்தான்
முட்களெனக் கற்பனை செய்து
விலகிவிடுகிறோம்.

அத்தனை
சௌந்தர்யமாய் அமர்ந்திருந்த
எவரும் எழுந்தெனக்கு
இடமளிக்காத போது
அவலட்சணமாக என் மனதில்
வரைந்துவைத்த அவன் மட்டும்
எழுந்து நின்று
“உட்காரு கண்ணு”என்றான்.

யோசிக்க வேண்டுமா என்ன?
தாய்மடி புகும் குழந்தையென
நானிருந்தேன் என்பதை
யோசிக்கவும் வேண்டுமா என்ன?

காய்ச்சலுக்கு
வைத்தயம் செய்து உடல்
இலகுவானதும்
மனதில் மாற்றம் உணர்கிறேன்.

முட்களாகவும்
அருவருப்பாகவும் நினைத்திருந்த
அத்தனை மனிதர்களைச் சுற்றியும்
மலர்கள் மலர்ந்திருக்கின்றன.
அந்த ஒருவன் மட்டும்
மலராகவே மலர்ந்திருக்கின்றான்.

அழகு
என்பதன் புனைவுத் திணிப்புகள்
அன்றிலிருந்து
மீண்டும் பழைய நிலைதேடி
உருமாறத் தொடங்கியது.

.கா.ரஹ்மத்துல்லாஹ்.



ஒரு கரை நீ
மறு கரை நான்
நடுவில் அணுக்களின் ஓடைகள்

கருவறை சிற்பக்கூடம்
உருவம் சிறிது சிறிதாக வளர்ச்சியடையும்

வயிற்றுப் பையில்
ஒரு கூடைக் காற்று
ஆனந்தத்தால் இதயத்தில்
நிலவொளியின் ஊற்று

இருகுறிகளின் சந்திப்பில்
சுவாசத்தில் எதிரொலிக்கும்
மகிழ்ச்சியின் அறிகுறி

ஓசையின்றி தத்தளிக்கும்
பேதை மொழி
பாஷையின்றி முக்குளிக்கும்
நேச ஒலி

தெப்பக்குளத்தில் நீந்தும்
மீனின் வெப்பநிலை
அளவீடு இல்லாதது

உருகும் ஓசைக்குள்
உருவாகும் பாஷைகள் ஆயிரம்.

**அ. உமர் பாருக்.**



சொந்த கிராமத்தில்
காளியம்மன் வீற்றிருக்கும்
தென் திசையில்
கால் நீட்டிப் படுக்காத அப்பா,
என் நகரத்து அடுக்குமாடி
குடியிருப்புக்கு வந்ததும்
தெற்கு எதுவெனக் கேட்க
சட்டென நினைவுக்கு வராமல்
குழப்பதில் தவறாக
சொல்லிவிடக் கூடாதென
திசைகாட்டும் செயலியை
அலைபேசியில்
பதிவிறக்கம் செய்து
சரியாக சொல்வதற்கு முன்
ஜன்னல் வழியே
மின்கம்பத்தின் நிழலை பார்த்து
கிழக்கே தலை வைத்து படுத்திருந்தார்
சூரியனை படித்திருந்த அப்பா!

**கருவேல் பாண்டியன்**

வெண்ணெய் திருடும்
சின்னத்திருடன் வந்திருக்கிறான்
தோழியிடமிருந்து பரிசாக..
அழகாக இருக்கிறான் என்று
அழைத்து நன்றி சொன்னால்
அடடா நான் புத்தனையல்லவா
உனக்காகத் தேர்ந்தெடுத்தேன்..
இவனையும் பிடித்தது, ஆனால்
கண் திறவாமல் இருந்ததால்
வேண்டாம் என்று விட்டேன்..
மாற்றிப் பொதிந்து விட்டார்கள்
என மாற்றித் தரவா என்றாள்..
குருடாயிருந்தும் வழிதவறாமல்
என்னிடம் வந்தவன் இங்கேயே
இருக்கட்டுமே என்கிறேன் நான்..
கண் திறந்து புன்னகைக்கிறான்
என் விஷமக் கண்ணன்..

**ஷெண்பா**



வெட்டப்படாமல் விட்ட நகமொன்று
வளர்ந்து வளர்ந்து
வீதியில் நடந்து செல்பவளைக்
கீறுகிறது
எப்படியேனும் இன்றாவது
ஒரு நகவெட்டியை வாங்கவேண்டும்

எத்தனை முறை வெட்டினாலும்
வளர்ந்து விடும் நகங்கள்
விரல்களுக்கு மட்டுமே
சிநேகிதர்களாக இருக்கின்றன
எல்லா ஏவல்களையும்
தட்டாமல் நிறைவேற்றிக்கொண்டு

அளவுக்கு மீறி வளர்ந்த நகங்களோடு
எச்சரிக்கையாகவே இருக்கவேண்டியுள்ளது
எதிர்பாராத சமயத்தில்
குத்திக்காயப்படுத்தி விடுகின்றன
கருணையேயில்லாமல்

வளர வளர சிலர்
நகங்களைக் கடித்துக் கடித்துத்
துப்பி விடுகிறார்கள்
வளர்ந்த நகங்களை
சிலர் வர்ணம்பூசி
மறைத்துக்கொள்கிறார்கள்

நல்ல வேளை
வீதியில் நடந்து சென்றவளுக்கு
நீண்ட நகமில்லை
தேய்ந்துகொண்டேயிருக்கும் நகங்கள்
விரல்களைத் தாண்டி வளர்வதில்லை

**சௌவி**

# அதே ஒலி



அவளிடமிருந்து
அவளின் பெயரையேந்தி
ஒருமுறையேனும்
வந்துவிடாதாவென
ஏங்கிய ஒலிக்குறிப்பு

ஒருமுறையேனும்
சிணுங்கிவிடாதவென
எதிர்பார்த்துக் காத்திருந்த ஒலித்துணுக்கு

எடுத்தெடுத்து
பார்த்து ஏமாந்த
பொழுதுகளில் மனமெழுப்பிய பெருஞ்சத்தங்களென


காதல்பித்தில்
கடவுளாயிருந்த
அதே
ரிங்டோன்தான்

திருமணத்திற்குப்பிறகு சிவப்பாய்த்' தெரியத்
தொடங்குகிறது
அவனுக்கு!

ரகுநாத் .வ

ஒரு காகிதப் பறவை
திசை அறிய அவசியம் என்ன?
செல்லக் கூடாத திசை இது
என்றெல்லாம் அதற்கொன்றும் தெரியாது
வீசும் திசையில் வீழ்கிறது
நீ பறக்கிறது என்று மகிழ்கிறாய்.
யாரே எழுதிய வார்த்தைகள் தான்
அதன் நினைவாம்
எழுதியவன் கொஞ்சம்
கிழித்தும் தான் வைத்திருக்கிறான்
காயங்கள் இங்கு
யாரைத் தான் விட்டு வைத்திருக்கிறது,
பறவையாய் மடித்தவன்
யார் என்பது அறியாமல்
முன் பின் தெரியாமல்
திசைகள் கிழிக்கும் அந்தப் பறவை
அர்த்தங்கள் புரியாமல் அர்த்தம் சுமக்கிறது,
மடித்தவன் விரிகிறான்
இப்போது திசையெங்கும்
அர்த்தங்கள்!

மு.முகமது ஃபாரூக்



நீ அந்தக் கடிதத்தை எழுத எண்ணியிருக்கத்
தேவையில்லை....

நீ அந்தக் கடிதத்தை
எழுதியிருக்கத்
தேவையில்லை...

நீ அந்தக் கடிதத்தை
என் முகவரிக்கு
அனுப்பியிருக்கத்
தேவையில்லை....

நீ அந்தக் கடிதத்தை
சான்றுத் தபாலில்
அனுப்பியிருக்கத்
தேவையில்லை....

நீ அந்தக் கடிதத்தைப்
பதிவுத் தபாலில்
அனுப்பியிருக்கத்
தேவையில்லை....

அந்தக்கடிதம்
கிடைக்குமுன் சந்திக்க
வந்த என்னைப் பார்த்து
பதற்றமுறுகிறாய்....

எத்துணை பெரிய
வில் வித்தைக்காரனுக்கும்
எய்த அம்பை
மீட்பது சாத்தியமில்லை
தானே....

**தமிழ்மணவாளன்**

# அன்னையாகியவள்



அவள் காட்டிய நிலவில்
பாட்டி வடை சுடவில்லை
ஏனென்றால்
என்னை ஏமாற்ற
அவளுக்கு பிடிக்காது.

தேர்வு நேரங்களில்
அவள் எனக்கு
ஆசிரியை....
கதை சொல்வதில்
அவள் எனக்கு
பாட்டியானவள்....

அம்மாவுக்கும்
அப்பாவுக்கும்
சண்டை என்றால்
இவள் தான்
எனக்கு ஆறுதல்....

பூப்பெய்த பின்
அம்மாவுக்கு
அடுப்படியிலிருந்து
சுதந்திரம் கொடுத்தாள்.

தினமும்
பலகாரம்,பண்டம் என
தாவணி கட்டியவள்
தம்பிக்கு
தாயாகிறாள்.

ப.ராஜகுமார் சிவன்.



பிரிந்து போனதால்
வாடி போகிறது
உதிர்ந்த பூக்கள்

**சாண்டில்யன் விவேகானந்தன்**

வாழ்வின் பெருநடனத்தை
கொதிக்கும் தேநீர்க்கோப்பையின்
விளிம்பின்மீது ஆடுகிற ஈ
நான்.

**ஜெயாபுதீன்**

ஆயிரம் லிட்டரைத் தாண்டி
தேயிலையும் சர்க்கரையும்
கலந்து ஒரு டம்ளரில்
வீற்றிருக்கிறது சுவை தர....

நாவின் மாட்டுக்கள்
இரவெல்லாம் தாகம் தீர்த்து
வறண்டு போய் இருக்கிறது.

அவளின் கைகளில் மலர்ந்து
படுக்கையில் மலரும் மணத்திற்கு
தேநீர் என்று பெயர்.

இளம் சூட்டில்
இனித்து விடுகிறாள்.

**வீரசோழன்.க.சோ. திருமாவளவன்**



ஒருவரின் அழகான நினைவுகளோடு
எந்த பாடலையும் கேட்டுவிடாதீர்கள்

ஒருவரின் அழகான நினைவுகளோடு
எந்த இடங்களிலும் சுற்றித்திரியாதீர்கள்

ஒருவரின் அழகான நிமிடங்களை சுமந்து பேசியபடி
தினம் செய்யும் எல்லாவேலைகளையும் செய்து
விடாதீர்கள்

ஒருவரின் பார்வையில் அவர்களின் தாலாட்டில்
கண்ணுறங்கிப்போகாதீர்கள்

ஒருவரின் காலை வணக்கத்தை தேடி
கண்முழிக்காதீர்கள்

ஒருநாள் திடீரென அப்பிக்கொள்ளும் தனிமை
உங்களை தனிமையாக்காது

எல்லா ரூபத்திலும் உயிர்கொல்லும்

தப்பியோட இப்பூமியில் புதுவழி தேடவேண்டும்

உங்களை நீங்கள் மீட்க
முடியாமலும் போகலாம்

உங்கள் தனிமைக்காய் கொஞ்சம் இசையையும்
கொஞ்சம் இடங்களையும்
கொஞ்சம் பயணங்களையும்
கொஞ்சம் இயற்கையையும்
பிடித்த கொஞ்ச ஆடைகளையும்
கொஞ்சம் தனிமையையும்
கொஞ்சம் உங்களையும் மிச்சம் வையுங்கள்

அல்லாது போயின்
ஒரு தனிமை உங்களை தனித்து விட்டு விடும்
மிகமோசமாய் எல்லா நேரமும் வதைத்தபடியே
தனிமை கொடிதில்லை
தனிமை நம்மை நினைவுகளால் வதைத்து
தவிக்கவிடாத வரை

**குபோதினி**



ஓர் அறையிலிருந்து
இன்னோர் அறைக்குத் தாவினேன்.
நிரவலாய் பரவியது குதிங்கால்கள்.
தாங்கிப் பிடித்த சுவர்
தழுவிய போது முதல் முறை வீழ்ந்தேன்.

வயது ஐந்து.

விளையாட்டாய் தள்ளி விட்டேன்.
அவன் எச்சில்
சோப்பு நுரையில் கரைகிற அளவு அழுந்த
விரவினேன்.
அந்நிய முத்தங்களுக்கு
பாதுகாப்பில்லை.

வயது பத்து.

பூப்படைந்த முதுகின் சாவியை
திருகிய நாற்பதின் நரை கிருமி.
உடைந்து வலித்த போதும்
யாரிடமும் சொல்லவில்லை.
ஆடைகளின் கதவிடுக்கில்
ஊடாடி சுகமணிந்த சாத்தான்.

வயது பதினைந்து.

நாற்பதைம்பது கடிதங்கள்.
நன்னான்கு சந்திப்புகள்.
விதிக்கொரு விளக்கம் தந்து
வீட்டுக்கு அனுப்பினேன் பிரிவுகள் இலவசம்.

வயது இருபது.

கயிறுகட்டி இழுத்தால்
உறவு கெட்டிப் படும்.
வெட்கம் துக்கம் கக்கத்தில்.
விடுதலையென்று சொல்லி
அன்பில் பூட்டினார்கள்.

வயது இருபத்தைந்து.

கடவுளுக்கு உபகாரம்.
படைத்ததில் பங்கு.
இறக்க முடியாத மடிச் சுமை.
கனத்த மார்புக்கு இச்சையற்ற கச்சை.

வயது முப்பது.


திசையற்ற மேய்ப்பனின் வேங்குழலுக்கு இசைகிற
செம்மறி பிழைப்பு.
பாதைகளில் யார் விளக்கேந்துகிறார்கள்.
ஒரே இருட்டு.
கையில் தங்கச் சாவி.

வயது நாற்பது.

எங்கிருக்கிறேன்.
தேடிப் பாருங்கள்.
கண்டடைந்த கண்களுக்கு
ஆயுளில் பாதி அணிந்து கொள்ள நேசம்.
யாராகயிருந்தாலும்
இயற்பெயரைக் கூறுங்கள்.

வயது பூஜ்ஜியம்.

**ஜே.ஜே.அனிட்டா**



தலைக்கு மேல்
விதி எழுதிக் கொண்டிருக்கின்றன
போர் விமானங்கள்.
அணுகுண்டுகளை எழுத்துக்கூட்டி
படித்துக்கொண்டிருந்தது
அச்சத்தில் ஊறிய வானம்.

குழந்தையை இடுப்பில் அமர்த்தி
மார்போடு அணைத்துக் கொண்டு
கணவன் பின்னே ஓடுகிறேன்.
புகையில்லாத திசையை
எட்டுத்திக்குகளும்
புகை சூழ்ந்து மறைக்கின்றன.

அழும் பிள்ளைக்கு உணவு தேட
முற்படுகிறோம்...
காலடியில் நழுவி விழுகிறது
நிலம்.

பதறி எழுந்துப் பார்த்தபோது தான்
கனவென்று தெரியவருகிறது.

என் கனவு சிந்திய வியர்வைக்கும்
நிஜமான போரில்
உயிர்கள் சிந்தும் வியர்வைக்கும்
நடுவே
கடலளவு வித்தியாசத்தில்
கரித்துக்கொண்டு இருக்கிறது
கண்ணீரின் உவர்ப்பு.

**தி.கலையரசி.**



மௌனங்களை உமிழும்
இரவில்
ஆத்யங்களின் அணிவகுப்பு
எதார்த்தமெல்லாம்
ஒன்றுமில்லை
ஏற்கனவே திட்டமிடப்பட்டது தான்
நீர்குமிழிகளின் வட்டமிடலின்
மையத்தில்
மேழத்தின் ஈற்றிலும்
விடையின் ஆதியிலும் அடியெடுக்கும் தென்றலின்
ஊடே
ஒரு வட்டமிடும் நாற்காலியில்
அமர்ந்திருப்பது என்பது
ஆடத்தெரியாதவனுக்கு
தெருக்கோணல் என்பது தானே
களைப்பென்பதெல்லாம்
கிடத்திலில் இல்லை
இப்போதுதான் தொடங்கியிருக்கிறது
ஒரு பெரும் யுத்தம்
ஆயுதங்கள் ஏதுமற்ற
நிராயுதபாணி நான்
ஒரு போர்வைக்குள்ளும்
போர்க்களம்
கிழிந்து சல்லடையாகும்
இதயத்தில்
நீள் மௌனத்தில் பிளிறிக்கொண்டு இருக்கிறது
பேரன்பின் சப்தம்...

**கருவை ந.ஸ்டாலின்**

படைப்பு

சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..